செய்தி வெளியீடு எண்:286 நாள் : 15.06.2015

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 12.6.2015 அன்று தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் நாமக்கல் மாவட்டம், இராசிபுரத்தில் 1 கோடியே 14 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவர் விடுதி கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 58 கோடியே 85 லட்சத்து 2 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 79 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், சிறுபான்மையினர் மாணவ, மாணவியர் விடுதிக் கட்டடங்கள் மற்றும் மதுரை செக்கானூரணியில் 2 கோடியே 2 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப்பள்ளி கட்டடத்தையும் திறந்து வைத்தார்கள்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின மாணவ, மாணவியர் இடைநிற்றல் இன்றி கல்வி கற்றிடவும், அவர்தம் கல்வி மற்றும் சமூக மேம்பாட்டிற்கும், வளர்ச்சிக்கும், நல்வாழ்விற்கும் பல்வேறு திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், நாமக்கல் மாவட்டம், இராசிபுரத்தில் 1 கோடியே 14 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவர் விடுதி கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மேலும், அரியலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, பெரம்பலூர், புதுக்கோட்டை, சேலம், தேனி, திருச்சிராப்பள்ளி, திருவாரூர், திருப்பூர், திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர், விருதுநகர், நாகப்பட்டினம், கடலூர், தருமபுரி, நாமக்கல், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் 22 கோடியே 75 லட்சத்து 88 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 38 பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவ மாணவியர் விடுதிகள்;

சிவகங்கை மாவட்டம் – சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டம் – அருப்புக்கோட்டை ஆகிய இடங்களில் 2 கோடியே 3 லட்சத்து 21 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவர் விடுதிகள்;

திண்டுக்கல் மாவட்டம் – நிலக்கோட்டை மற்றும் கொடைக்கானல், நாகப்பட்டினம் மாவட்டம் – மயிலாடுதுறை, புதுக்கோட்டை மாவட்டம் – புதுக்கோட்டை, திருப்பூர் மாவட்டம் – உடுமலைப்பேட்டை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் – நாவலூர் குட்டப்பட்டு (இனாம்குளத்தூர்) ஆகிய இடங்களில் 6 கோடியே 68 லட்சத்து 49 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 6 பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவியர் விடுதிகள்;

சேலம், கடலூர், தருமபுரி, நாமக்கல், திருவாரூர், திருவள்ளூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் 18 கோடியே 26 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 24 மிகப் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர் விடுதிகள்;

புதுக்கோட்டை மாவட்டம் – புதுக்கோட்டையில் சீர்மரபினர் கல்லூரி மாணவியர் விடுதி; திண்டுக்கல் மாவட்டம் – என். பஞ்சப்பட்டி மற்றும் தேனி மாவட்டம் – எ. வாடிப்பட்டி ஆகிய இடங்களில் சீர்மரபினர் பள்ளி மாணவர் விடுதிகள்; புதுக்கோட்டை மாவட்டம் – நாகுடி மற்றும் கொத்தமங்கலத்தில் சீர்மரபினர் பள்ளி மாணவியர் விடுதி; திண்டுக்கல் மாவட்டம் – பேகம்பூரில் சிறுபான்மையினர் பள்ளி மற்றும் கல்லூரி மாணவியர் விடுதி; திண்டுக்கல்லில் கள்ளர் சீரமைப்பு பள்ளி மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகள்; தேனி மாவட்டம் – மேலகூடலூரில் கள்ளர் சீரமைப்பு பள்ளி மாணவியர் விடுதி; என 9 கோடியே 11 லட்சத்து 9 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 9 சீர்மரபினர், கள்ளர் சீரமைப்பு மற்றும் சிறுபான்மையினர் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர் விடுதிகள்;

மதுரை மாவட்டம் – செக்கானூரரணியில் 2 கோடியே 2 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கள்ளர் பெண்கள் மேல்நிலைப்பள்ளிக் கட்டடம்;

என மொத்தம் 62 கோடியே 1 லட்சத்து 52 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் கல்லூரி மற்றும் பள்ளி மாணவ மாணவியர் விடுதிகள், கள்ளர் சீரமைப்பு பள்ளி மாணவ மாணவியர்

விடுதிகள், சிறுபான்மையினர் பள்ளி மற்றும் கல்லூரி மாணவியர் விடுதி ஆகிய 80 விடுதிக் கட்டடங்களையும் ஒரு கள்ளர் சீரமைப்பு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக் கட்டடத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் திறந்து வைக்கப்பட்ட மாணவ, மாணவியர் விடுதிகளில், கிரானைட் சமையல் மேடை, சூரிய ஒளி மூலம் நீரை சூடுபடுத்தும் கருவி, மின்சார புகைபோக்கி, தரைதள தண்ணீர் சேமிப்பு தொட்டி, குளிர்சாதன பெட்டி ( Fridge), விடுதியில் உள்ள விளக்குகள் மற்றும் மின்விசிறிகளுக்கு தேவையான மின்சாரம் தயாரித்திட 1 KWP திறன் கொண்ட சூரிய ஒளி போட்டோ வோல்டிக் பவர் பிளான்ட் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சட்டமன்ற பேரவைத் தலைவர் திரு ப. தனபால், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு பி. தங்கமணி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு எஸ். அப்துல் ரஹீம், தலைமைச் செயலாளர் திரு கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு) பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் க. அருள்மொழி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 15.6.2015